**தலைப்பு 122 – பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 122 – பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 திசெம்பர் 22 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 3,403.56 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 1,502.32 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 1,901.24 மில்லியன் அதாவது 55.86 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 1,255.18 | 1,218.21 | 36.97 | 2.94 |
| மூலதன | 2,148.38 | 284.11 | 1,864.27 | 86.78 |
| மொத்தம் | 3,403.56 | 1,502.32 | 1,901.24 | 55.86 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சிற்குரிய 12201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 15.00 | 14.15 | 5.00 | 9.27 | 42.00 | 23.91 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 7002/0000/00/0143/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 0.23 மில்லியன் ஆகும்.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 03 பொது வைப்புக் கணக்குகளுக்குரிய 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 106.45 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0002/0166/000 | 0.001 |
| 6000/0000/00/0013/0121/000 | 106.39 |
| 6000/0000/00/0020/0018/000 | 0.05 |
| மொத்தம் | 106.45 |

**2.5 கணக்காய்வு அவதானிப்பு**

பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

அமைச்சினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (i) | ஆளணி சம்பளப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 453 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 211 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502 (2) பிரகாரம் அதன் 11 ஆம் உறுப்புரை | நாளது வைரயாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | பொருட் பதிவேட்டுப் புத்தகம் | நிதிப்பிரமாணம் 454(1) | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

(v) இழப்புக்கள் தொடர்பான நிதிப்பிரமாணம் 110 நாளது பதிவேடு வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2017 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 8.66 மில்லியனாக இருந்தது.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 1,799.70 நிதியேற்பாடு பயன்படுத்தாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்ததுடன் 02 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 4.40 மில்லியன் நிதியேற்பாட்டில் ஏனைய இரண்டு செலவின விடயங்களுக்கு ரூபா 3.50 மில்லியன் மாற்றப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 1.90 மில்லியன் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 08 செலவின விடயங்களுக்கான மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் அந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 27 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.4 கட்டுநிதிக் கணக்கு

2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2) இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக 05 பதவிநிலை தரமில்லாத உத்தியோகத்தர்களுக்கு 08 சந்தர்ப்பங்களில் ரூபா 327,700 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

### 3.5 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2006 ஒக்தோபர் 23 ஆந் திகதிய பீடீ/356/280/3/எஸ் ஆம் இலக்க நிதி திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் வெளிநாட்டு தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வியாபார விளம்பரங்களுக்காக அறவிடப்படுகின்ற வரி வருமானம் என்பவற்றை நம்பிக்கைப் பொறுப்பு நிதியமொன்று தாபிக்கப்படும் வரை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2009 நவம்பர் 04 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அந்த வரி வருமானத்தை வைப்புக் கணக்கில் செலவு வைப்பதற்கும் றன்மிஹிதென்ன டெலிசினிமா பூங்காவை நிர்மாணிப்பதற்கும் அதற்கு இணையான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்காகவும் அங்கீகாரம் கிடைத்திருந்தது. எவ்வாறாயினும் 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் மேலே குறிப்பிட்ட நம்பிக்கை பொறுப்பு நிதியம் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 6000/0000/00/0013/0012/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் ரூபா 106.40 மில்லியன்

தொகையான மீதியொன்று காணப்பட்டது அவ்வாறே திறைசேரி உண்டியல்களில் ரூபா 551.54 தொகையும் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

### 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

12201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தருக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவையாக இருந்த கடன் மீதி ரூபா 22,588 ஆன இருந்தது. அது 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வந்த போதிலும் அந்நிலுவை கடன் மீதிகள் அமைச்சு அறவிட தவறியிருந்தது.

### 3.7 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டின் போது அமைச்சினை உள்ளடக்கி அதன் கீழ் காணப்படுகின்ற 13 நிறுவனங்களுக்காக 52 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 17 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

### 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

றன்மிஹிதென்ன டெலிசினிமா திரைப்பட கிராமத்தில் படப்பிடிப்பிற்காகச் சமூகமளிப்பவர்களுக்கு அறை வசதிகளை வழங்குவதற்கு ஏ, பீ மற்றும் சீ தரங்களில் 03 வகையான அறைகளின் கீழ் 43 அறைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும், ஆண்டின் போது அவற்றில் முறையே 04 சதவீதம், 08 சதவீதம் மற்றும் 08 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

#### (ஆ) பெறவேண்டிய மீதிகள்

2006 மார்ச் 31 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் இரண்டாவது பகுதியின் மேலதிகமாக பிரசுரிக்கப்பட்ட 2006 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பிரிவிற்கு இணங்க 02 தொலைக்கட்சி அலைவரிசைகள் 02 தொடர்பாக இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படங்கள் தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் வியாபார நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கடந்த 07 வருடங்களுக்காக 2016 திசெம்பர் 31 வரையில் அறவிடப்படவேண்டிய ரூபா 21.54 மில்லியன் தொகையான வரி வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.9 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்**

மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் ஏற்பட்ட 12 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(1)(அ) பிரகாரம் பரிசோதனை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**3.10 செயலாற்றல்**

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

றன்மிஹிதென்ன தேசிய டெலிசினிமா பூங்கா மன்ற அதிகாரச்சட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திட்டமிடல்**

(i) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்காக ஊடக துறை வீடு உத்தேச முறை நிர்மாணம், சார்க் ஊடக வியாபாரங்களின் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டத்தினை இலங்கையில் நடாத்துதல் மற்றும் அமரதேவ இசையகத்தை நிர்மாணித்தலை ஆரம்பித்தல் போன்ற செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் 18 பதவியணியினர் பயிற்சியளித்தல் (உள்நாட்டு/வெளிநாட்டு) நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 1,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டில் ரூபா 669,000 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. பதவியணியினர் பயிற்சிக்காக பயிற்சியளித்தல் மிகவும் சிறந்த ஒன்றாக இருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் பயிற்சியளிப்பதற்கு நிர்வாகத்துறை தவறியிருந்தது.

**3.11 வங்கிக் கணக்கு செயற்படுத்தலிலான குறைபாடு**

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

(அ) பாராளுமன்ற மறுசீரமைப்புப் பிரிவினால் 2016 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தும் 06 மாதங்களுக்கு மேல் 03 வருடங்கள் காலம் வரை வங்கிக்கு கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 896,589 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தீர்வையாகாத ரூபா 219,710 பெறுமதியான வைப்புக்கள் 06 மாதங்கள் முதல் 03 வருடங்கள் வரையான காலமாக இருந்து வந்த போதிலும் அவை தீர்வையாவதற்கு காரணங்கள் தேடி ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.12 நட்டமும் இழப்பும்**

மீளாய்வாண்டின் போது றன்மிஹிதென்ன டெலிசினிமா பூங்காவின் வருமானம் ரூபா 11,216,073 ஆக இருந்த போதிலும், அதன் செலவினம் ரூபா 17,943,718 ஆக இருந்தமையால் ரூபா 6,727,645 நட்டமொன்றாக அவதானிக்கப்பட்டது.

**3.13 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பற்றாக்குறை தொடர்பாக அமைச்சினால் சீராக்கப்படாத பந்திகளின் தொடர்பு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | **கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு** | | **தொடர்புடைய விடயம்** |
|---|---|---|---|
| | **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| (i) | 2012 | 8(ஆ)(ii) | ரன்மிஹிதன்ன டெலிசினிமா நாடக பூங்காவிற்காக தனியான அதிகாரச் சட்டமொன்றை ஏற்படுத்துவதற்கு 2012 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்தச் சட்டம் 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் சட்டமொன்று நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2012 | 12(அ) | றன்மிஹிதென்னவிற்கு விநியோகிக்கப்பட்ட நுழைவுச்சீட்டிற்கும் பெறப்பட்ட வருமானத்திற்குமிடையே காணப்பட்ட ரூபா 99,305 பற்றாக்குறை தொடர்பாக 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 2012 | 1.12(ஏ) | 2012 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட ஊடகத்துறை பண்பாட்டு விழுமியக் கோவை 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 2012 | 1.13(இ) | வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளை நடாத்துவதற்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது, நிரந்தர அனுமதிப்பத்திரத்திற்குப் பதிலாக தற்காலிக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. நிரந்தர அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கான அல்லது புதுப்பிப்பதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால் எவ்வித |

| | | | |
|---|---|---|---|
| | | | மேற்பார்வையொன்று இல்லாமல் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படுகின்றதாகவும் பின்னர் வழங்கப்பட்டிருந்த தற்காலிக அனுமதிப்பத்திரங்களில் முன்னர் குறிப்பிடாத நிபந்தனைகளும் உள்ளடக்கப்பட்டிருப்பதால் நிறுவனம் தொடர்பாக ஒரேவித தீர்மானம் எடுப்பதற்கு முடியாமை மற்றும் தீர்மானம் எடுக்கும் சிக்கல்களும் உருவாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (v) | 2013 | 5.11(ஆ) | 2016 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை மரபுகளை மேம்படுத்தும் வகையில் வெளிநாடுகளில் தயாரிக்கப்படுகின்ற நிகழ்ச்சிகளை உள்நாட்டில் ஒளிபரப்புவதற்காக வரியொன்று விதிக்கப்பட்டிருந்த போதிலும், 15 அனுமதிப்பத்திரங்களின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கேபள், செய்மதி, இணையதளம் மற்றும் தொலைபேசி அடிப்படையிலான தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிப்பரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகள் இந்த வரி விதிப்பின் கீழ் இல்லாதிருந்தமையால் உரிய வரி விதிக்கும் நோக்கம் இந்நாட்டில் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் சேகரிக்கப்பட்ட வரி வருமானத்தை செலவு வைப்பதற்கு நிதியமொன்றை தாபிப்பதற்கு 2009 ஆம் ஆண்டில் அரச நிதித் திணைக்களத்துடன் இணக்கப்பாட்டிற்கு வந்திருந்த போதிலும் 2016 மே வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | 2014 | 3.16(அ) | கேபள் தொலைக்காட்சிக்கான அனுமதிப்பத்திரத்தை 2012 ஆம் ஆண்டின் போது பெற்ற நிறுவனமொன்று சட்டவிரோத முறையில் செயற்பட்டிருந்தமை 2013 ஆம் ஆண்டின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கையில் அமைச்சினால் அந்த நிறுவனம் தொடர்பாக எந்தப் பரிசோதனையோ அல்லது சட்டரீதியான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பாராளுமன்றத்தின் செயற்குழுக் கட்டளையின் பிரகாரம் கேபள், செய்மதி மற்றும் இணையதளத்தை அடிப்படையாகக் கொண்ட தொலைக்காட்சி நிறுவனங்கள் தொடர்பாக புதிய கொள்கையொன்று ஏற்படுத்தப்படாது 2014 நவம்பர் மாதத்தின் போது செய்மதி தொழில்நுட்பத்தின் ஊடாக தொலைக்காட்சி வலையமைப்பை நடாத்துவதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (vii) | 2015 | 3.11 | இலங்கை அரசாங்கத்தினதும் ஜப்பான் அரசாங்கத்தினதும் நிதி உதவியின் கீழ் (JICA Loan) 2014 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட பௌமிக்க தொலைக்காட்சி ஒளிபரப்பு நடவடிக்கைகளுக்காக எண்ணியல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் செயற்திட்டம் 2015 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டுக் கடன் ரூபா 950 மில்லியன் தொகையும், வெளிநாட்டு நிதியீட்டத்துடன் தொடர்புடைய உள்நாட்டுக் கிரயம் ரூபா 950 மில்லியனுமாக ரூபா 1900 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அந்த செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் உள்நாட்டுக் கிரயத்தின் கீழ் ரூபா 2.7 மில்லியன் செயற்திட்டத்திற்காக முறையற்ற வகையில் நியமிக்கப்பட்ட பதவியணியினர்களுக்குச் சம்பளம் செலுத்துவதற்கு செலவிடப்பட்டிருந்தது. அந்த பதவியணி நியமனமும் முறையற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (viii) | 2015 | 3.14(ஆ)(ii) | அமைச்சரின் பதவிக் காலத்திற்கு மாத்திரம் செல்லுபடியாகும் வகையில் உதவிச் செயலாளர் (தொழிலாளர் தொடர்பு இலங்கை நிருவாக சேவையிலில்லாத) பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தருக்கு அமைச்சரின் பதவி இல்லாமல் இருந்த 2015 ஆகஸ்ட் 17 ஆந் திகதி முதல் 2015 நவம்பர் 02 ஆந் திகதி வரையான காலத்திக்காக சேவைக்கு அறிக்கையிடாமல் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 117,241 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 33,110 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. |
| (ix) | 2015 | 3.18(அ) | அமைச்சினால் 2014 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 648,312 தொகை செலவில் இலங்கையின் அபிவிருத்தி தொடர்பாக “FRONTIER” பெயரில் 1,000 சஞ்சிகைப் பிரதிகள் அச்சிடப்பட்டிருந்ததுடன் அவை பதிவேடுகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. 2017 ஒக்தோபர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அந்த சஞ்சிகைகள் பகிர்ந்தளிக்கப்படாது அழிவடைந்த பொருட்கள் களஞ்சியத்தில் குவித்து வைக்கப்பட்டு உக்கும் நிலையில் காணப்பட்டன. |

| | | | |
|---|---|---|---|
| (x) | 2015 | 319(ஈ) | பதவியில் நிரந்தரமாக்கப்படாத அமைச்சின் உதவிப்பணிப்பாளர் (ஊடக) பதவியில் உள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு 01/2013 ஆம் இலக்க வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கையின் நியதிகளுக்கு முரணாக பதவிநிலைத்தர பதவியொன்றில் 6 வருட காலம் கட்டாய சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் சேவையில் உறுதிப்படுத்தப்படாத உத்தியோகத்தர்களுக்கு வழங்க வேண்டிய சலுகை விலையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரமொன்று 2015 செப்தெம்பர் 03 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாதிருந்தும் இந்த உத்தியோகத்தருக்கு சலுகைவிலை மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்குதலின் மூலம் அரசாங்கத்திற்கு வரி வருமானமாக கிடைக்க வேண்டிய ரூபா 2,271,732 தொகையொன்று இழக்கப்பட்டிருந்தது. |

(ஆ) அரசாங்க கணக்குகள் குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகள் அமுல்படுத்தப்படாமை

அமைச்சு தொடர்பாக அரசாங்க கணக்குகள் குழுவினால் 2014 சனவரி 22 ஆந் திகதி வழங்கப்பட்ட கட்டளைகளுக்கிடையே 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்படாத கட்டளைகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | அரசாங்க கணக்குகள் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பந்தியின் தொடர்பு | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| (i) | 05 | இலத்திரனியல் ஊடக நிறுவனங்களுக்காகவும் முறைப்பாடு செய்யக்கூடிய வகையில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தை திருத்தம் செய்தல். |
| (ii) | 07, 08 | ஒளிபரப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டதை அங்கீகரிக்கச் செய்தலும் தாபித்தலும், எண்ணியல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் செயல்முன்னேற்றம் தொடர்பாக குழுவிற்கு அறிக்கை சமர்ப்பித்தல். |
| (iii) | 12 | அரசாங்க நிதி முறையற்ற வகையில் தனியார் தரப்பினருக்குச் செல்வதைத் தடுப்பதற்காக தனியார் வானொலி அலைவரிசையினதும் தொலைக்காட்சி அலைவரிசையினதும் அனுமதிப்பத்திரதாரர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல், வருடாந்த கட்டணம் அறவிடல் மற்றும் அனுமதிப் பத்திரங்களை புதுப்பித்தல் என்பவற்றுக்கு குறித்த நடைமுறையொன்றை ஏற்படுத்துதல். |

| | | |
|---|---|---|
| (iv) | 13 | அனுமதிப்பத்திரதாரர்களின் சரியான தகவல்களை கம்பனிப் பதிவாளரிடமிருந்து பெற்று குழுவிற்கு அறிக்கையிடல் மற்றும் கேபள், செய்மதி மற்றும் இணையதள அடிப்படையிலான தொலைக்காட்சி நிறுவனங்கள் தொடர்பான புதிய கொள்கையொன்றை ஏற்படுத்துதல். |

(இ) அமைச்சு தொடர்பாக அரசாங்க கணக்குகள் குழுவினால் 2016 ஒக்தோபர் 26 ஆந் திகதி வழங்கப்பட்ட கட்டளைகளுக்கிடையே 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்படாத கட்டளைகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| அரசாங்க கணக்குகள் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பந்தியின் தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| (i) | 10 | தனியார் வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்காக நிரந்தர அனுமதிப்பத்திரம் வழங்கும் முறையொன்று இல்லாததால் அதற்காக அனைத்து ஏற்பாடுகளையும் உள்ளடக்கி ஒலிபரப்பு அதிகாரசபை சட்டத்தை நிறைவேற்றியது. |
| (ii) | 12 | முன்னைய அமைச்சரின் தனிப்பட்ட பதவியணி உறுப்பினர் ஒருவருக்கு அமைச்சிலிருந்து ரூபா 1,008,307 ஆன சம்பளம் வழங்கப்பட்டுள்ளதுடன் அக்காலத்திற்காக முகாமைத்துவ நிலையத்திலிருந்தும் சம்பளம் பெற்றுக் கொண்டமைக்காக மீண்டும் சம்பளத்தை அறவிட நடவடிக்கை எடுத்தல் |
| (iii) | 14 | இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படங்கள், தொவைக்காட்சி நாடகங்கள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகளுக்காக 2 தொலைக்காட்சி அலைவரிசைகளிடமிருந்து கடந்த 6 ஆண்டுகளுக்காக ரூபா 32 மில்லியன் நிலுவை வரி அறவிட வேண்டியிருந்தது. |
| (iv) | 16 | பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக சமூக காப்புறுதி மேவுகை ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் போது கொள்வனவு வழிகாட்டல்களுக்கு இணங்க போட்டி விலை கோரி பொருத்தமான காப்புறுதி முறைமையொன்றும் நிறுவனம் ஒன்றை தெரிவு செய்தல். |

**3.14 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 19 | 04 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 111 | 107 | 04 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 50 | 43 | 07 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | | | | |
| | ஊடகத்துறை | - | 03 | - | 03 |
| | பாராளுமன்ற அலுவல்கள் | 1125 | 1058 | 67 | - |
| | மொத்தம் | 1313 | 1231 | 85 | 03 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி காணப்பட்ட 18 வெற்றிடங்கள் நிரப்புவதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் தற்காலிக / அமைய / ஒப்பந்த அடிப்படையில் இருக்கும் மேலதிக உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை.